


## மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கிய சம்பவம்

# தலைநகரில் சொத்துடைமைகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை

கோலாலம்பூர், செப். 14-

கடந்த மாதம் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கி திடீரென ஒரு பெரிய குழி தோன்றிய சம்பவத்தால் தலைநகரில் சொத்துடைமைகள் மதிப்பில் எந்தப் பாதிப்பும் இல்லை. சொத்துகளை விற்பதிலும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று மலேசிய வீடமைப்புச் சொத்துடைமை மேம்பாட்டாளர் சங்கத்தின் (ரேஸ்டா) துணைத் தலைமைச் செயலாளர் கே கொங் வாய் நேற்றுக் கூறினார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கிய சம்பவத்தால் தலைநகரில் சொத்துடைமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்றும் அவர் மேலும் சொன்னார்.

இதுவரை அப்படிப்பட்ட பாதிப்பு ஏதும் தென்படவில்லை. வழக்கம்போல சொத்துடைமைகளுக்கு விலைமதிப்பு உள்ளது. விற்பனையும் வழக்கம்போல் நடைபெறுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மஸ்ஜிட் இந்தியாவில் மட்டும்தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. அதோடு கோலாலம்பூர் பாதுகாப்பானதே என்பதை கோலாலம்பூர் மாநகர் மன்றமும் உறுதி செய்திருப்பதாக அவர் சொன்னார்.

இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்வதை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆனால் மண் உள்வாங்கி பெரிய குழி தோன்றிய சம்பவம் மஸ்ஜிட் இந்தியாவில் மட்டும் நடக்கவில்லை. மாறாக தென் கொரியாவிலும் அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. அந்த நாட்டில் ஒரு நெடுஞ்சாலையில் ஏற்பட்ட பெரிய குழிக்குள் ஒரு கார் விழுந்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆகஸ்டு 23ஆம் தேதி இந்தியா, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது விஜயலெட்சுமி என்பவர் மலாயன் மென்சனில் இருந்து ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நடந்துசென்ற சமயம் திடீரென மண் உள்வாங்கி பெரிய குழி தோன்றியதால் அதற்குள் விழுந்தார்.

சுமார் 8 மீட்டர் ஆழத்தில் விழுந்த அவரைத் தேடும் பணி முழு வீச்சில் நடைபெற்றறது. ஆனால் அவருடைய உடல் கிடைக்கவில்லை.